காட்டேரி அரசு விதைப்பண்ணையில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு



**ஊட்டி, ஆக.01-**

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், பர்லியார் ஊராட்சிக்குட்பட்ட காட்டேரி அரசு விதைப்பண்ணையில் நடைபெற்று வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், அரசு தலைமை கொறடா மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர், பொதுமக்கள் எளிதாக தெரிந்து கொள்ளும் வகையில், முகாமில் அரசு துறை அரங்குகள் அமைந்துள்ள இடம் தொடர்பாக அறிவிப்பினை தொடர்ந்து அறிவிக்க வேண்டும்

பல்வேறு அரசு திட்டங்களின் சார்பாக வைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் எனவும், பொதுமக்கள் அளிக்கும் மனுக்களை பெற்று அதனை பதிவு செய்ய வேண்டும்.

அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது கனிவுடன் பரிசீலனை செய்து 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்;.

முன்னதாக, அரசு தலைமை கொறடா மற்றும் மாவட்ட கலெக்டர் ; ஆகியோர், 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பொதுமக்களுக்கு பரிசோதனை செய்யப்படும் முறைகள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் மனுக்கள் பதிவு செய்யப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) ஜெயலட்சுமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், குன்னூர் வட்டாட்சியர்கள்; ஜவகர், காயத்ரி (சமூக பாதுகாப்பு திட்டம்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயா, ஜெய்சங்கர் உட்பட பலர் உடனிருந்தனர்.

# உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு அரசு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்



**ஈரோடு,ஆக.01-**

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், பசுவபட்டி பிரிவு, அம்மன் காட்டேஜ் கணுவாய் இறக்கம் பகுதியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வு வழங்கும் வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் தொடங்கி வைக்கப்பட்டு முகாம்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 340 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கபட்டு வருகிறது. "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு வழங்கப்பட உள்ளது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், பசுவபட்டி, அம்மன் காட்டேஜில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு உடனடி தீர்வாக 13 பயனாளிகளுக்கு வருமான சான்றிதழ், வகுப்பு சான்றிதழ், விதவை சான்றிதழ், சிறு, குறு விவசாய சான்றிதழ், குடிநீர் நீர் இணைப்பு பெயர் மாற்ற ஆணை, தொழிலாளர் நல வாரிய அட்டை, மின் இணைப்பு பெயர் மாற்ற ஆணை, காய்கறி விதைத் தொகுப்பு உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, பெருந்துறை வட்டாட்சியர் ஜெகநாதன், சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பிரமணி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 21ம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா இன்று துவங்குகிறது




**ஈரோடு ஆக.01-**

தமிழ்நாடு அரசு மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 21 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா ஆகஸ்ட் 1 முதல் 12 ஆம் தேதி வரை 12 நாள்களுக்கு ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் 1 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தொடக்கவிழா நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கந்தசாமி தலைமை வகிக்கிறார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் வரவேற்பு மற்றும் அறிமுகவுரையாற்றுகிறார். வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி திருவிழா அரங்கைத் திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே. செல்வராஜ், ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின் முதன்மைக் கல்வி அலுவலர் கோ. சுப்பாராவ், மக்கள் சிந்தனைப் பேரவையின் செயலாளர் ந. அன்பரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பொது நூலகத்துறை இயக்குனர் ச. ஜெயந்தி நோக்கவுரையாற்றுகிறார். பத்மஸ்ரீ விருதாளர் எஸ்.கே.எம். மயிலானந்தன் முதல் விற்பனையைத் தொடங்கி வைக்கிறார். மாவட்ட நூலக அலுவலர் சு. சாமிநாதன் நன்றிகூறுகிறார்.இரண்டாம் நாள் சனிக்கிழமை மருத்துவர் கு. சிவராமன், விஜய் டிவி தமிழ்ப் பேச்சு எங்கள் மூச்சு நிகழ்வின் வெற்றியாளர் மு.இராகவேந்திரன் ஆகியோரும்; மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை திண்டுக்கல் ஐ .லியோனி தலைமையில் சுழலும் சொல்லரங்கம் நிகழ்வும், நான்காம் நாள் சுகி.சிவம், தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் ஆகியோரும், ஐந்தாம் நாள் விஐடி பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன், இராணுவ விஞ்ஞானி முனைவர் வி. டில்லி பாபு ஆகியோரும்; ஆறாம் நாள் பேராசிரியர் சொ.சொ.மீ சுந்தரம், கவிதா ஜவகர்ஆகியோரும், ஏழாம் நாள் புலவர் செந்தலை ந.கவுதமன். பாவலர் அறிவுமதி ஆகியோரும்; எட்டாம் நாள் கவிஞர் மற்றும் நடிகர் ஜோ. மல்லூரி, பால சாகித்ய புரஸ்கார் விருதாளர் விஷ்ணுபுரம் சரவணன் ஆகியோரும்; ஒன்பதாம் நாள் கோமல் தியேட்டர் வழங்கும் ஐந்து நாடகங்களும், பத்தாம் நாள் தொல்லியல் ஆய்வாளர் கி. அமர்நாத் ராமகிருஷ்ணா, ஊடகவியலாளர் ரா. விஜயன் ஆகியோரும் பதினோராம் நாள் கலைமாமணி டி.கே.எஸ் கலைவாணன், அரு. நாகப்பன் ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

நிறைவு நாளில் முனைவர் இறையன்பு நிறைவுரையாற்றவுள்ளார். இந்த ஆண்டின் புத்தகத் திருவிழாவில் 230 அரங்குகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் 86 ஆங்கிலநூல் அரங்குகள் உள்ளன. உலகத் தமிழர் படைப்பரங்கம், ஈரோடு மாவட்ட படைப்பாளர் அரங்கம், புதிய புத்தக வெளியீட்டு அரங்கம் போன்ற சிறப்பம்சங்கள் உள்ளன.

இந்த ஆண்டு புதிய புத்தக வெளியீடுகளில் ஒரு பதிப்பகம் மட்டும் ஒரே நிகழ்வில் 50 புதிய நூல்கள் வெளியீட்டரங்கில் வெளியிடுகின்றன. தேர்ந்த கதைச் சொல்லிகளை வைத்து தினசரி மாணவர்களுக்கு கருத்தாழம் மிக்க கதை சொல்வதற்கான சிறப்பரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாசிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிஜ நாடகங்கள் புத்தகத் திருவிழா மைதானத்தில் அன்றாடம் நடைபெறவுள்ளன. மாணவர்களுக்கு உண்டியல் வழங்குதல், ரூ 250-க்கும் மேல் நூல்கள் வாங்கும் பள்ளி மாணவர்களுக்கு நூல் ஆர்வலர் சான்றிதழ்கள் வழங்குவது உள்ளிட்ட மாணவர்களுக்கான திட்டங்களும் உள்ளன. அனைத்து நூல்களுக்கும் 10% கழிவு உண்டு. நூலகங்களுக்கோ, கல்வி நிறுவனங்களுக்கோ வாங்கப்படும் நூல்களுக்குக் கூடுதல் விலைச் சலுகை உண்டு. தினசரி மாலை நிகழ்வுகளில் ஒரு உயர்மட்ட அரசு அலுவலர் முன்னிலை வகிப்பார். மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள், 108 ஆம்புலன்ஸ், அவசர உதவிக்கு அரசு மருத்துவமனை மருத்துவக்குழு, தீயணைப்பு வாகனம் உள்ளிட்ட வசதிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

தலைகவசம் உயிர் கவசம்

# நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் கைத்தறி ஆடை அலங்கார அணிவகுப்பு




**ஈரோடு ஆக 1-**

ஈரோடு நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் தேசிய கைத்தறி நாளான ஆகஸ்ட் 7ஆம் தேதியை முன்னிட்டு 30.7.2025 அன்று கைத்தறி நாளை பேற்றும் விதமாக கைத்தறி ஆடை அலங்கார அணிவகுப்பாக நடைபெற்றது.

நவரசம் கல்லூரியின் முதல்வர் முனைவர் இராகனிஎழில் வரவேற்றார் தொடர்ந்து கல்லூரியின் தலைவர் டி.கே தாமோதரன், பொருளாளர் சி பழனிச்சாமி, செயலாளர் கு செந்தில் குமார் ஆகியோர் மாணவிகளுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் ஈரோடு ஐடியாமேக்ஸ் நிறுவனத்தின் மேலாளர் எஸ் சதீஷ்குமார் மற்றும் ஈரோட்டைச் சார்ந்த ஆடை வடிவமைப்பாளர்கள் விபி மோகனப்பிரியா, கே எஸ் திவ்யா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கைத்தறியின் முக்கியத்துவம் பற்றியும் அதன் உன்னதத்தை பற்றியும். கைத்தறிதுறையானது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தின் அடையாளமாகவும் கைவினைத் திறனின் சிறந்த வெளிப்பாடகவும். நெசவாளர்களின் கடின உழைப்பு மற்றும் படைப்பாற்றலின் வெளிப்பாடாகவும், திகழ்கின்றது என்றும் பேசினார் கள் தொடர்ந்து நவரசம் கல்லூரி மாணவிகளின் பிரம்மிக்க வைக்கும் ஆடை அலங்கார அணிவகுப்பு நடைபெற்றது. அணிவகுப்பில் பங்கேற்ற மாணவிகள் கைத்தறியின் சிறப்பினையும், நமது கலாச்சாரத்தையும் முக்கியத்துவத்தையும் பார்வையாளர்களுக்கு பறைசாற்றும் வண்ணம் தாங்களே தங்களை அழகுப்படுத்தும் விதமாக வடிவமைத்த அலங்காரத்தோடு அணிவகுப்பை மேற்கொண்டனர். . இந்நிகழ்வில் கல்லூரியின் அனைத்து துறை தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் கல்லூரியின் உதவி பேராசிரியர் முனைவர் சி சியாமளவள்ளி நன்றி கூறினார்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

கோயம்புத்தூர் மாவட்டத்தில்

# அரசு துறை அலுவலர்களுடனான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பொதுக்கணக்குக் குழுவினர் ஆய்வுக்கூட்டம்: தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் நடைபெற்றது




**கோவை,ஆக.01-**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பொதுக்கணக்குக் குழு (2024-2026) அரசு துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை தலைமையில், குழுவின் உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் அக்ரி.எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (போளூர்), ப.அப்துல் சமது (மணப்பாறை), கோ.ஐயப்பன் (கடலூர்), எஸ்.சேகர் (பரமத்தி வேலூர்), கே.ஆர்.ஜெயராம் (சிங்காநல்லூர்), ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இணைச்செயலாளர் பா.ரேவதி, துணைச் செயலாளர்கள் வி.சுமதி, ஜெ. பாலசீனிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.கே.கார்த்திகேயன் மநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மோ.ஷர்மிளா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே மகளிர் திட்டம் திட்ட மேலாளர் மதுரா, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கீதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) சத்யவிஜயன், பிரிவு அலுவலர் சுப்புலட்சுமி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டின் சட்டமியற்றும் அமைப்பான தமிழ்நாடு சட்டமன்றம் சார்பில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் ஒவ்வொன்றும் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளைத் திறம்பட மேற்கொண்டு வருகின்றன. பொதுக்கணக்குக் குழுவானது நிர்வாகங்களில் வெளிப்படை தன்மையினை உறுதி செய்வதற்காக பிரிட்டிஷர்களின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. மக்களின் சார்பில் நிர்வாக கணக்குகளை பொதுக்கணக்குக் குழு பராமரித்து வருகின்றது. நிதியினை செலவளிப்பதற்கு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் அனுமதி அளிக்கப்படுகின்றபோது, அந்தநிதி எவ்வாறு செலவளிக்கப்படுகின்றது என்பதனை ஆய்வு செய்யும் பணியினை பொதுக் கணக்குக் குழு மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நிதித்துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையங்கள் துறை, உயர்கல்வித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உள்மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நீர்வளத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, உள்(போக்குவரத்துத் துறை), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறை ஆகிய அரசு துறைகளின் அலுவலர்களிடம் தணிக்கை அறிக்கையில் கண்டுள்ள பத்திகள் தொடர்பாக விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் ஸ்ரீ பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில், ஒரு பயனாளிக்கு சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பியனராக பதிவு செய்த நலவாரிய அடையாள அட்டையினையும், ஒரு பயனாளிக்கு ரூ.6700 மதிப்பில் விலையில்லா திரவ எரிபொருளுடன் கூடிய தேய்ப்புப் பெட்டியும், ஒரு பயனாளிக்கு ரூ.6000 மதிப்பில் விலையில்லா மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரத்தையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், தாட்கோ மூலம் 3 தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டைகளையும், முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய கடன் உதவியையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ.57.76 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களையும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புணரமைப்பு திட்டத்தின் கீழ் சுகுணாபுரம் திட்டத்தில் 7 பயனாளிகளுக்கு ரூ.47.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆணைகளையும் என மொத்தம் 25 பயனாளிகளுக்கு ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை வழங்கினார்.

பின்னர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு ஆய்வுக்கூட்டம் அரசுத் துறை அலுவலர்களுடன் இன்று நடைபெற்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பொதுமக்களின் உடல் நலனில் மிகவும் சிறப்பாக கவனம் செலுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் முதல் மாவட்டமாக கேன்சர் தடுப்பு நடவடிக்கையினை கோயம்புத்தூர் மாவட்டம் மேற்கொண்டுள்ளது. மேலும், மூன்று கட்டமாக நடைபெறும் கேன்சர் பரிசோதனையில் முன்னணி மாவட்டமாக இருப்பது பெருமை அளிக்கிறது. இன்று நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுவின் ஆய்வுக் கூட்டத்தில், நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் சார்பில் குடிசைகள் அகற்றும்போது அவர்களுக்கு வீடுகள் வழங்கவும், தீயணைப்பு துறைக்கு தேவையான வசதிகள், வாகனங்கள் மற்றும் வனத்துறைக்கு தேவையான வாகனங்கள் வாங்குவது தொடர்பான சில கோரிக்கைகள் வைக்கப்பட்டன. இது தொடர்பாக பரிந்துரைகள் செய்ய இக்குழு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் இக்குழு இரண்டு நாட்கள் மனநிறைவுடன் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது . என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



**நீலகிரி மாவட்டம், கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வெஸ்ட்புரூக் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கூடுதல் கலெக்டர் அபிலாஸ் கவுர் உட்பட பலர் உள்ளனர்.**

மழைநீர் உயிர்நீர்

# மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.2.20 கோடி மதிப்பிலான கடனுதவிகள்

### ஈரோடு மண்டல இணைப்பதிவாளர் த.ப.கந்தராஜா வழங்கினார்



**ஈரோடு ஆக.01-**
ஈரோடு மாவட்டம், கந்தப்பசவுண்டன்வலசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூபாய் 2.20 கோடி மதிப்பிலான கடனுதவிகள் ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் ஜி.காலிதா பானு துணைப்பதிவாளர் பயிற்சி ப.அஜித்குமார், சங்க செயலாட்சியர் இரா.கிருபாகர் சென்னிமலை வட்டார கூட்டுறவு சார்பதிவாளர்கள் அலுவலர் வ.பா.சக்திவேல் துணைப்பதிவாளர் அலுவலக (பொது விநியோகத் திட்ட) கூட்டுறவு சார்பதிவாளர்/ கண்காணிப்பாளர் ச.நவீன் சங்க செயலாளர் .து.மோகனசுந்தரம் சங்க பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: இன்று நடைபெறும் இடங்கள் அறிவிப்பு

**ஊட்டி, ஆக.01-**
நீலகிரி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று(1-ந்தேதி) நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரமாவது-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார். அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்பட்டுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது கடந்த 15.07.2025 முதல் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்று (01.08.2025) குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 17,18 மற்றும் 19-ற்கான முகாம் குன்னூர் ஜான் சர்ச் வளாகத்திலும், குந்தாவட்டம், பிக்கட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல்15-ற்கான முகாம் பிக்கட்டி உயர்நிலைப்பள்ளியிலும் நடைபெறவுள்ளது.

நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மேற்படி முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால் தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்துகொண்டு கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே,உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கேட்டுக் கொண்டுள்ளார்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 45 பயனாளிகளுக்கு ரூ. 44.71 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்

### எம்.எல்.ஏ. வி.செந்தில்பாலாஜி வழங்கினார்



**கரூர்,ஆக.01-**
மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி கரூர் வட்டம், ஆத்தூர் பூலாம்பாளையம் சமுதாயக் கூடம், கரூர் மாநகராட்சி, பசுபதிபாளையம் தனியார் திருமண மண்டபம் மற்றும் பஞ்சமாதேவி நவஜீவன் பள்ளி ஆகிய பகுதிகளில் (31.07.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமையில் 45 பயனாளிகளுக்கு ரூ. 44.71 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டில் "உங்களுடன் ஸ்டாலின்" எனும் சிறப்பு திட்ட முகாம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டத்தில் 179 முகாம்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இதுவரை 36 முகாம்கள் நடந்து முடிவடைந்துள்ள நிலையில் மொத்தம் 28,318 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. சில மனுக்களுக்கு அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. ஒரு சில மனுக்களுக்கு ஒரு வார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து பதிலளிக்கப்படும். அதிகபட்சம் 45 நாட்களுக்குள் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அவர்களின் கரங்களில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் எனும் உறுதியளிக்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வீட்டுமனைப் பட்டாக்கள் இன்றி வாழும் பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 28,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இழக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 45,000 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்ற தாய்மார்கள், பெரியோர்கள் இத்தனை ஆண்டுகளாக எண்ணற்ற மனுக்கள் அளித்தும் கிடைக்காத பட்டா தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா பெற்ற பொதுமக்கள் தங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துள்ளனர். இதனைத்தொடர்ந்து கூட்டுறவுத்துறையின் சார்பாக 3 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 31.60 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும், 4 விவசாயிகளுக்கு ரூ.8.01 இலட்சம் மதிப்பீட்டில் பயிர்க் கடனுதவிகளும், 5 விவசாயிகளுக்கு ரூ. 5.10 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளும், எரிசக்தித் துறையின் சார்பாக 3 நபர்களுக்கு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும், வருவாய்த் துறையின் சார்பாக 20 நபர்களுக்கு இருப்பிடச் சான்று, இறப்புச் சான்று, சாதிச்சான்று, பட்டா மாறுதல், வாரிசு சான்று மற்றும் வருமானச் சான்று உள்ளிட்ட சான்றிதழ்களையும்,

மாநகராட்சியின் சார்பாக 8 நபர்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 2 நபர்களுக்கு காதொலி கருவி, ஊன்றுகோல், கண் கண்ணாடி மற்றும் மடக்குக்குச்சி உள்ளிட்ட உதவி உபகரணங்கள் என மொத்தம் 45 நபர்களுக்கு ரூ. 44.71 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி வழங்கினார். இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, துணை மேயர் ப. சரவணன், வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், வட்டாட்சியர்கள் மோகன்ராஜ், குமரேசன் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### இன்று துவங்கி வருகிற 11ம் தேதி வரை நடைபெறும்

# நாகப்பட்டினம் மாவட்ட நான்காவது புத்தகத் திருவிழாவிற்கான முன்னேற்பாடு பணி: கலெக்டர் ப.ஆகாஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு






**நாகப்பட்டினம்,ஆக.01-**
நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் நான்காம் புத்தகத் திருவிழாவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மக்கள் திருவிழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்ற புத்தகத் திருவிழா இன்று 1 முதல் 11 வரை நாகப்பட்டினம் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற உள்ள நான்காம் புத்தக திருவிழாவில் புகழ்பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்பககங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகளை அமைத்து இலட்சகணக்கான கிடைப்பதற்கறிய புத்தகங்களை ஒரே இடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளது. அதுமட்டுமின்றி தினந்தோறும் புகழ்பெற்ற கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் நடைபெறவுள்ளது. புத்தக திருவிழாவின் அனைத்து தினங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகள், மரபு சார் இசைக்கருவி கண்காட்சி, அறிவியல் கண்காட்சி, நாகையின் வாழ்வியல் புகைப்பட கண்காட்சி என தினந்தோறும் பார்வையாளர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் அமையபெற உள்ளது. இப்புத்தகதிருவிழாவில் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்துகொள்ள ஏதுவாக பேருந்து வசதிகள் செய்யப்படவுள்ளது.

அதனைதொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற உள்ள நான்காம் புத்தகத் திருவிழாவில் பள்ளி மாணவர்களுக்கு படிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு கேடயம் மற்றும் புத்தகம் வாங்குவதற்கு தள்ளுபடி கூப்பன் வழங்கப்படவுள்ளது. அனைவரும் இந்த அறிய சந்தர்பத்தை குடும்பத்துடன் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என மாவட்ட கலெக்டர்.ப.ஆகாஷ், கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இப்புத்தக திருவிழாவில் கலந்துகொள்ளும் பொதுமக்களுக்கு அனைத்து விதமான அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யவும், கண்காணிப்பு கேமரா பொருத்தவும், தீயணைப்பு மற்றும் காவல்துறை பாதுகாப்பு போன்றவைகளை வழங்கவும் உரிய அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர்சு.செல்வகுமார், மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருவாரூரில் அரசு பள்ளிகளுக்கு முதலுதவி பெட்டி வழங்கும் விழா

**திருவாரூர்,ஆக.01-**
திருவாரூர் அறநெறி லயன்ஸ் சங்கத்தின் சார்பில் நேற்றைய தினம் 50 கிராமப்புற அரசு பள்ளிகளுக்கு முதலுதவி பெட்டி வழங்கும் திட்டம் புலிவலம அரசு மேல்நிலைப்பள்ளியில் துவங்கப்பட்டது.ரூபாய் 1500- மதிப்புடைய முதலுதவி பெட்டிகள் வழங்கப்பட்டது.ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் முதல் உதவிக்கு தேவையான பொருட்களை சங்கத்தின் சார்பில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக திருவாரூர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் அருண் காந்தி கலந்து கொண்டார்.மேலும் இந்நிகழ்ச்சியில் அறநெறி லயன்ஸ் சங்கத்தின் செயலாளர் முருகானந்தம்,பொருளாளர் செங்குட்டுவன்,சிஈஒ ராஜ்குமார்,முருகதாஸ்,அபுதாஹிர், சரவணன்,தலைமையாசிரியர் செந்தில்வேல்,ஆசிரியர் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# நீலகிரியில் கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரியவர்கள் விவரமறிய வாட்ஸ் ஆப் எண் அறிமுகம்

### கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

**ஊட்டி, ஆக.01-**
நீலகிரியில் கட்டிடங்கள் கட்ட அனுமதிகோரியவர்கள் விவரமாறிய வாட்ஸ் ஆப் எண் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளதாவது-

நீலகிரி மாவட்டத்தில் குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரும் பொதுமக்கள் றறற.ழடெinநிpயவா.பழஎ.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக ஏற்படும் சந்தேகம், விபரங்கள் மற்றும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மாவட்ட ஆட்சியரகத்திலுள்ள உதவி எண்ணான 9442772701 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டும் (அ) இதே எண்ணிற்கு வாட்ஸ் ஆப் மூலமாகவும் விவரம் அனுப்பி தங்களது விண்ணப்பத்தின் நிலையினையும் அறிந்து கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்;.

# அஞ்சல் துறையில் விற்பனை நிலையங்களை திறக்க ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்லாம்

**ஊட்டி, ஆக.01-**
அஞ்சல் துறையில் விற்பனை நிலையங்களை திறக்க ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்லாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கோட்ட கண்காணிப்பாளர் ஜி.ஆர்;.அசோக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

இந்திய அஞ்சல் துறை சேவைகளில் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்தும் வகையில் புதுப்பிக்கப்பட்ட உரிமையாளர் திட்டத்தின் கீழ் விற்பனை நிலையங்களைத் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விற்பனை நிலையங்களைத் திறக்க ஆர்வமுள்ள தனிநபர்கள் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.இதற்கு விண்ணப்பிக்க தகுதிகளாக இந்திய குடிமக்கள் அல்லது தகுதியான நிறுவனங்கள், அஞ்சல் செயல்பாடுகள் குறித்த அடிப்படை அறிவு, தேவையான உள்கட்டமைப்பில் முதலீடு செய்யும் தயார் மனப்பான்மை இருக்க வேண்டும். விருப்பமுள்ளவர்கள் தங்களது முழுமையான விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் நியமிக்கப்பட்ட அஞ்சல் அதிகாரிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். விவரமான வழிகாட்டிகள் மற்றும் விண்ணப்ப படிவங்களை அஞ்சல் கோட்ட அலுவலகத்திலோ அல்லது அஞ்சல் துறையின் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்: விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி: 06.08.2025மேலும் விபரங்களுக்கு ஜி.ஆர்.அசோக்குமார், அஞ்சலக கோட்டக் கண்காணிப்பாளர், நீலகிரி கோட்டம், உதகமண்டலம் 643 001. 0423-2443785 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த சிறப்பு முகாம்

### கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்தார்



**தஞ்சாவூர்,ஆக.01-**
வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் மாவட்ட அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முறை குறித்த முகாமை கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், (31.07.2025) துவக்கி வைத்தார்.

இம்முகாமில் கலெக்டர் தெரிவித்ததாவது.

தஞ்சாவூர் மாவட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் மாவட்ட அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முறை குறித்த முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள், பராமரிக்கும் வழிமுறைகள் குறித்த தெளிவுரைகளும், விளக்கவுரைகளும் அரசு துறை அலுவலர்கள் மூலமாகவும், தனியார் நிறுவனங்களின் வழியாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான நடமாடும் பழுது நீக்கம் இயந்திரத்தின் (மொபைல் சர்வீஸ் யூனிட்) மூலம் இம்முகாமில் பங்கேற்ற விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க சிறு சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மற்றுமொரு முக்கிய அம்சமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்கள் மற்றும் டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 150 மாணவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு குறித்த செயல் விளக்கங்களை அறிந்து கொண்டு பயன் பெற்றனர்.

இம்முகாமிற்கு வருகை புரிந்த ஆர்வமுள்ள இளைஞர்களை இத்துறையால் நடத்தப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு ஊக்குவிக்கப்பட்டது என கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்தார்.

# மென்பொருள் தரம் உயர்த்தும் பணி ஊட்டி, குன்னூர் அஞ்சலக தலைமை தபால் நிலையங்கள் நாளை செயல்படாது

**ஊட்டி, ஆக.01-**
மென்பொருள் தரம் உயர்த்தும் பணியின் காரணமாகஊட்டி, குன்னூர் தலைமை அஞ்சலக தபால் நிலையங்கள் நாளை(2-ந் தேதி) செயல்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் அசோக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

இந்திய அஞ்சல் துறையின் மென்பொருள் 04 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை முதல், தரம் உயர்த்தப்பட இருக்கின்றது. இந்த புதிய தரம் உயர்தப்பட்ட மென்பொருளில் மூலம் பணம் செலுத்தும் வசதி உட்பட பல்வேறு புதிய வசதிகள் அறிமுகம் செய்யப்பட இருக்கின்றது. புதிய பென்மொருள் பயன்பாடு எந்த வித சிரமும் இன்றி செயல்படுத்த 02.08.2025 சனிக்கிழமை அன்று 'பரிவர்த்தனை இல்லா நாளாக' அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே 02.08.2025 சனிக்கிழமை அன்று உதகமண்டலம் தலைமை அஞ்சலகம் மற்றும் குன்னூர் தலைமை அஞ்சலகம் அதன் கீழ் இயங்கும் அனைத்து துணைஃகிளை அஞ்சலகங்களில் அஞ்சலக சிறு சேமிப்பு கணக்குகளில் முதலீடு செய்வது மற்றும் கணக்கில் இருந்து பணம் எடுப்பது ஆகிய சேவைகளை பெற இயலாது.

மேலும் பதிவுத் தபால் விரைவுத் தபால் ஃபார்சல் அனுப்புவது போன்ற சேவைகளும் 02.08.2025 சனிக்கிழமை அன்று பெற இயலாது. பொது மக்கள் இந்த மென்பொருள் தரம் உயர்த்துவதில் ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் .இவ்வாறு அஞ்சலகக் கோட்டக் கண்காணிப்பாளர் ஜி ஆர் அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

**கனம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**
**STC. No.23/2025**

கௌதமன்,
த/பெ.மதிவாணன்,
எண்.150, பெரியார் சாலை
வடக்கு, வெங்கமேடு,
கரூர் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.
– புகார்தாரர்

– எதிர் –

தர்மலிங்கம்,
த/பெ.அப்புசாமி,
நெ.85டி. சீலம்பட்டி,
குறிச்சி கிராமம், பவானி
தாலுக்கா, ஈரோடு மாவட்டம்.
– எதிர்

புகார்தாரர் கொடுக்கும் பொது அறிவிப்பு

புகார்தாரர், எதிரி மீது காசோலை மோசடி வழக்கு கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவரை கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடி கட்டளை திருப்பப்பட்டதாலும் மற்றும் மேற்சொன்ன பிடிகட்டளையை சார்வு செய்யப்படுவதை தவிர்க்க எதிரி தர்மலிங்கம் தலைமறைவாக இருந்து வருகிறார். எனவே எதிரி எதிர்வரும் 02.09.2025-ம் தேதியன்று புகார்தாரரின் முறையீட்டுக்கு பதில் அளிக்க கிருஷ்ணராயபுரம் கனம் மாவட்ட உரிரமையியல் மற்றும் உடனிணைந்த குற்றவியல் நீதிமன்றத்தில் அலுவலக நேரத்திற்குள் முன்னிலையாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னிலையாகாத பட்சத்தில் கனம் நீதிமன்றம் எதிரி மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியவும்.

N.RAJESHKUMAR,B.A.,LL.B,
புகார்தாரர் வழக்கறிஞர்,
கரூர்.

